மில்க்வைற் செய்தி
Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஆடி 1982 ★ இதழ் - 79


# இசைக்கலை வாழ்க

சிவபூமி எனப் பெயர்பெற்ற எங்கள் நாட்டில், யாழிசையாற் புகழ்பெற்றது யாழ்ப்பாணம். எங்கள் நாட்டில் ஈஸ்வராலயங்கள் ஆயிரக்கணக்காக ஒளியூட்டிய காலம் ஒரு காலம். சிவபெருமான் இசைப்பிரியர். அவர் ஏழிசையாய் இசைப்பயனாய் உள்ளவர். இசைப்பாடலுக்கு உருகுபவர். திருமுறையாசிரியர்கள் இசையோடு பாடக் கேட்டின்புற்றுத் திருவருள் சுரந்தவர். தாமே இசைக்கருவி தாங்கிப் பாடியாடுபவர். அறிவுத்தெய்வ மூர்த்தமாய்த் தட்சணாமூர்த்தியாய் எழுந்தருளும்போது, வீணாகான வடிவிலும் இருந்தருள் சுரப்பவர். இலங்கையை ஆண்ட இராவணன் ஏழிசை வல்லவன். சாமகானம் அறிந்தவன்.

ஒருகாலத்தில் வீடுகள்தோறும் விளங்கிய இசை, இடைக்காலத்தில் சில வீதிகளிலே தான் ஒலித்தது. தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என்னும் நால் வகை இசைக் கருவிகளை நன்கறிந்திருந்த நம்மவர், ஒரு சில காலம் அவற்றை மறந்திருந்தனர். அவை ஒரு சிலரின் ஏகபோக உரிமையாய் நிலவியபின், இன்று மறுமலர்ச்சிபெற்று எல்லோரிடத்திலும் பரவலாக வளர்ந்து வருகின்றன.

வீடுகள் தோறும் இசை வளர்க.

இசைவல்லார் எல்லோருக்கும்
எங்கள் வாழ்த்து.



பனைச் சபை இயக்குனரும் பனையபிமானியுமான மில்க்வைற் தொழிலதிபர், யாழ்ப்பாணம் கற்பகம் திறப்புவிழாவில் பேசுகிறார்.

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்

ஆதிபுராணத் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே.

திருச்சிற்றம்பலம்

வேதங்களுக்குத் தலைவரும், வேதம் ஓதுபவர்களுக்கு மேலாளாக உள்ளவரும், உமாதேவியாரின் நாயகரும், சிறந்த தவத்தால் மேம்பட்ட முனிசிரேட்டர்களுக்கு முதல்வரும், எல்லார்க்கும் முதன்மையான தலைவரும், திருவாதிரை என்னும் பெரிய நட்சத்திரத்திற்கு உரியவரும், பூதகணங்களுக்குத் தலைவரும், புண்ணியமூர்த்தியுமானவர் சிவபெருமான். அவரின் முதன்மைத்தன்மை பெரிது.




## செய்ந் நன்றியறிதல்

தனக்குப் பிறர் செய்த நன்றியை மறவாது நன்கு உணர்ந்து அதற்குத்தக்கபடி நடத்தல்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு.

எவ்வகைப்பட்ட பாவஞ் செய்தவருக்கும் பரிகாரம் உண்டு. ஆனால் செய்ந்நன்றி மறந்த பாவத்திற்குப் பரிகாரமே இல்லை.

### GRATITUDE

There is redemtion for even those stilling every virtue, but never for the ungrateful.

## யூலை 1982 நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | வியாழன் | — | ஏகாதசி விரதம் |
| 3 | சனி | — | சனிப்பிரதோஷ விரதம் |
| 5 | திங்கள் | — | பூரணை விரதம், |
| | | — | மாவிட்டபுரம் சப்பற மஞ்சம் |
| 10 | சனி | — | மாவிட்டபுரம் கைலாச வாகனம் |
| 11 | ஞாயிறு | — | மட்டக்களப்பு அமிர்தகழி கொடி |
| 15 | வியாழன் | — | கலட்டி எச்சாட்டி அம்மன் கொடி |
| 16 | வெள்ளி | — | கார்த்திகை விரதம் |
| | | | மாவிட்டபுரம் கார்த்திகைத் திருவிழா |
| 17 | சனி | — | ஏகாதசி விரதம் |
| 18 | ஞாயிறு | — | பிரதோஷ விரதம் |
| | | — | மாவிட்டபுரம் பெரிய சப்பறம் |
| 19 | திங்கள் | — | மாவிட்டபுரம் தேர் |
| 20 | செவ்வாய் | — | ஆடி அமாவாசை விரதம் |
| | | — | மாவிட்டபுரம் தீர்த்தம் |
| 24 | சனி | — | ஆடிப்பூரம் |
| 25 | ஞாயிறு | — | நல்லூர்க் கந்தன் கொடி |
| 28 | புதன் | — | சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை |
| 30 | வெள்ளி | — | வரலட்சுமி விரதம் |
| 31 | சனி | — | ஏகாதசி விரதம் |

## ஆடிமாதச் சிறப்பு

சைவத் தமிழ் நாகரிகத்தில் நின்று நிலவும் விழாக்கள், பண்டிகைகள், சம்ஸ்காரங்கள் பலவும் நம் முன்னோர் காலந்தோறும் எவ்வாறு வாழ்ந்தார்கள், எவற்றையெல்லாம் கைக்கொண்டார்கள், அநுட்டித்தார்கள், உய்திபெற்றார்கள் என்றெல்லாம் நினைவு செய்கின்றன.

இப்பெரிய அண்டத்துக்கே ஒளியூட்டுவதோடு கிரகங்கள் பலவற்றையும் தன்னைச் சுற்றிவரச்செய்து எமக்கு வாழ்வளிக்கின்ற ஞாயிறு என்னும் சூரியனுக்கு வடதிசைச் செலவு, தென்திசைச் செலவு என இருவகைக் கதிகளைக் கூறுவர்.

உத்தராயணம் என்னும் வடதிசைப் போக்கும், தட்சிணாயனம் என்னும் தென்திசைப் போக்கும் முறையே பகல் இரவு போன்றவைகளாகும். தை மாதம் முதல் ஆனிமாத முடிவுவரை உத்தராயணமும், ஆடி மாதம் முதல் மார்கழி மாத முடிவுவரை தட்சிணாயனமும் நிலவும் என்பர்.

உத்தராயணம் தொடங்கும் நாளிலே சூரியனுக்குப் பொங்கிப் படைத்து வழிபடுதல் பெருநாகரிகச் செயலாகும். ஆடி மாதத்து முதல் நாளை ஆடிப்பிறப்பு என்று

கொண்டாடும் வேளையில் அன்று மாலை கூழ், கொழுக்கட்டை முதலிய இனிப்புப் பண்டங்கள் தயாரித்துச் சுற்றஞ்சூழ உண்டு மகிழ்ந்து கொண்டாடுவர்.

ஆடிப்பிறப்புக்குப் பள்ளிக்கூடங்கள் விடுதலை விடுவது பழைய சைவத்தமிழ் நாகரிகம். அதனைப் பரம்பரையாகக் கண்டு மகிழ்ந்த நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்கள், "ஆடிப்பிறப்புக்கு நாளைவிடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே, கூடிப்பனங்கட்டிக் கூழும்குடிக்கலாம் கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே" என்று பொக்குவாய் திறந்து குதூகலித்துப் பாடியுள்ளார்கள்.

ஆடிப்பிறப்பினையடுத்து ஆடிமாதத்து அமாவாசை தினமும், பூரநாளும் சிறப்பானவையாகும். ஆடி அமாவாசை தினம் பிதிர்க்கடன் செய்வதற்கும் தீர்த்தமாடுவதற்கும் நியமிக்கப்பெற்ற நாளாகும். ஆடிப்பூரம் அம்பிகை வழிபாட்டுக்கும் விழாவெடுத்தற்கும் சிறந்த நாளென்பர்.

ஆடிமாதம் பண்டிகைகள் ஆரம்பிக்கும் காலமாகும். ஆடி முதல் மார்கழி வரையும் பண்டிகைமயமாக இருக்கும். தமிழ் நாட்டில் புகழ்பெற்ற பொன்னி என்னும் காவிரிநதி புதுப்புனலோடு பெருகிப் பாயும்போது பூரிப்படைந்த தமிழ்நாட்டினர், அப் புதுப்புனலில் நீராடி மகிழ்வதைப் பெரும்பேறுகக் கருதிவந்தனர். மன்னுதி மன்னர்களும் இப்புனித நீர்விழாவில் மக்களொடு கலந்து நீராடி நீந்தி மகிழ்தல் வழக்கம். ஆடி பதினெட்டாம் நாளில் காவிரி பெருகுவதை ஆடிப்பெருக்கு என வழங்குவர். அதுபற்றி முன்னுள் ஆஸ்தான கவிஞர் நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை அருமையாகப் பாடியிருக்கிறுர்.

"நடந்தாய் வாழி காவேரி" என்று காவிரி நதியின் அசைவை இளங்கோவடிகள் பாடியமை மக்கள் மனத்தில் பெருமகிழ்ச்சியை உண்டாக்கியுள்ளது. காவிரியை அம்மனுகக் கருதி விழாவெடுத்த தமிழர், மாரியம்மனுக்கும் கரகம் எடுத்து ஆடிவந்தனர். சிலம்பம் பழகுதல், உடுக்கு அடித்தல், தெருக்கூத்து ஆடுதல் முதலிய வைபவங்கள் பொதுமக்கள் மத்தியில் பெருமகிழ்ச்சியை உண்டாக்கி வந்தன.

ஆடி மாதத்துப் பூரநாளில் வைணவப் பெரியார்களுள் ஒரேயொரு பெண்ணடியாளான ஆண்டாள் என்னும் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி தோன்றினள் என்பர். "திருவாடிப் பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே" என்பது அவள் தோற்றங்குறித்த செய்யுளடியாகும்.

ஆடி மாதத்துச் செவ்வாய்க்கிழமைகள் அம்பிகை வழிபாட்டுக்கும் நோன்புக்கும் சிறந்த தினங்கள் என்பர். "ஆடிச்செவ்வாய் தேடிக்குளி, அரைத்த மஞ்சளைப் பூசிக் குளி" என்றும், "ஆடிச் செவ்வாய் தேடிப்பிடி அடுத்த வருடம் ஆண்பிள்ளை" என்றும் செய்யுளடிகள் நாடோடியாக வழங்குதல் உண்டு.

இங்ஙனம் விழாக்கள், நோன்புகள் நிறைய வருதல் காரணமாகப் போலும், ஆடிமாதத்தில் திருமண நிகழ்ச்சி தவிர்க்கப்பட்டுள்ளது எனக் கருத இடமுண்டு.

---

இசை, பண், சுரம், காமரப்பாட்டு, கானம், கொள், வரி, கந்தருவம், கீதம், இராகம், கேயம், நாதம் என்பன ஒருபொருட் சொற்கள்.

# இசையும் எமது நாடும்

இலங்கையின் வடக்கில் யாழ்ப்பாணத்திற்கு வீணு கானபுரம் என்றும் பெயர். அன்றி யாழ் என்னும் மிகப் பழைய வாத்தியக் கருவியின் பெயரால் யாழ்ப்பாணம் எனவும் பெயர்பெற்றுள்ளது. கிழக்கிலங்கை மீனிசை பாடும் பிரதேசம். அன்றிப் பழைய யாழ் வாத்தியத்தைக் கனவுலகிலிருந்து நினைவுலகத்துக்குக் கொண்டுவந்து உபகரித்த வித்தகர் விபுலானந்தர் தோன்றிய பிரதேச மாகும்.

மத்திய காலத்து வடமாகாண கிழக்குமாகாண வாசிகள் காவியஞ் செய்வதில் வல்லவராகி, இசை நுணுக்க மறிந்து, இசை தழுவிய கீர்த்தனை, கும்மி, குறவஞ்சி, சிந்து, பள்ளு முதலிய பிரபந்தவகைகளைப் பண்ணில் தோயப் பாடியுள்ளார்கள். பண்ணில் தோயப் பொருள் முடிப்புக்கட்டிப் பாடும் பாவலர்க்கு ஈந்திட வேண்டும் எனக்கருதிய மன்னர்கள் எண்ணி எண்ணிப் பொன் முடிப்புக்கள் கட்டிவைத்தனர் என்று வரலாறு கூறுகிறது.

"பண்ணிற் றேயப் பொருண் முடிப் புகட்டிப்
பாடும் பாவலர்க் கீந்திட வென்றே
எண்ணிப் பொன்முடிப் புக்கட்டி வைத்திடு
மீழ மண்டல நாடெங்கள் நாடே"

ஆறுமுகநாவலரவர்கள் சைவமும் தமிழும் வளர்த்ததோடு இசைத்தமிழ் வளரவும் பணிபுரிந்தவர். தமது தந்தையார், பெரிய தந்தையார் வழியில் தாமும் கீர்த்தனைகள் பாடல்கள் பாடிப் பணிபுரிந்துள்ளார். பண்ணோடு திருமுறைகள் ஓதவல்ல ஓதுவாமூர்த்திகளைத் தமிழ் நாட்டினின்றும் இங்கே வரவழைத்து பண்பரவப் பாடுபட்டுள்ளார். தமது மாணுக்கருள் ஒருவராகிய காசிவாசி செந்திநாதஐயரவர்களைப் பண்பயிலப் பணித்து அவரைச் சாரங்கி வாத்தியம் சகிதமாகத் திருமுறையோத வைத்தனர். நாவலர் சிவபூசை செய்த வேளைகளில் செந்திநாதையரவர்கள் திருமுறைகளோதுதல் வழக்கமாயும் நிலவியது.

தமிழ்நாட்டில் கோபாலகிருஷ்ண பாரதியார் நந்தன் சரித்திரத்தைக் கீர்த்தனைகளாகச் சிதம்பரத்தில் பாடியுருகிய போது அவற்றைக் கேட்டு மெய்மறந்த நாவலரவர்கள் பாரதியாரைப் பராட்டியூக்குவித்தார். இன்னும் தம் காலத்தில் தமிழ்நாட்டிற் சிறப்புற்று விளங்கிய பொன்னேதுவார் அவர்களை இலங்கைக்கு அழைத்துவந்து எம்மவரைப் பண்பயிலச் செய்தார்.

வடமாநில வித்தியாதிகாரிகளும் வயலின் வித்தகர் பரம் அவர்களும் இசைப் பிரியர்களும் 1931-ஆம் ஆண்டில் நிறுவிய வட இலங்கைச் சங்கீதசபை இன்று பொன்விழாப் பொலிவுகண்டு பரந்த அளவிற் பணிசெய்வதற்குப் பாரியதிட்டம் வகுத்துள்ளது. அதற்கு வடமாநில கல்வித்திணைக்களமும் சேர்ந்து வசதிகளும் வாய்ப்புக்களும் வகுத்துதவி வருகின்றது.

முன்னர் அங்கொரு வீடு இங்கொரு வீடு என்னும் வகையில் ஒருசிலர் சங்கீதத்துறையில் ஈடுபட்டிருந்த காலம்போய், இன்று வீடுகள் தோறும் இசைக்கலை விளக்கத்தால் வீதிகள் எங்கும் பண்ணும் பரதமும் ஒலிப்பன

---

★ இசை எல்லா உயிர்களையும் வசப்படுத்துவது ★

வாயுள்ளன. வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல் முதலிய வாத்தியக் கருவிகளை வாசிப்பவரும், வாய்ப் பாட்டுத்துறை வல்லாரும் அதிகரித்து வருகின்றனர்.

முன்னர் ஈழத்திருநாட்டுத் திருக்கோயில் வருடாந்த உற்சவவேளைகளில் தமிழ்நாட்டுத் தவில் மேதைகளும் நாதஸ்வர வித்துவான்களும் சாரை சாரையாக இங்கே வந்து இசைமாரி பொழிந்து போனமை பழங்கதையாகப் போய்விட்டது.



இன்று எங்கள் நாட்டு இசைவல்லாளர்கள் செத்த ஆட்டுத்தோலில் செந்தமிழ்ப் பண்ணும், பட்ட மரத் துளையிற் பைந்தமிழப் பண்ணும் வாசிக்கப்பழகிப் பெரும் பெயர் பெற்றுள்ளார்கள். இன்னும் இசைத்தமிழோடு நெருங்கிய தொடர்புடைய பரதநாட்டியப் பயிற்சியும் நாடெங்கும் பரவலாகப் பயிலப்பெற்று வருகின்றது. நாட்டிய நாடகங்களுக்கு நட்டுவாங்கஞ் செய்யவல்ல பெண்பாலார் பலர் சங்கித ஆசிரியைகளாய்க் கல்லூரிகளை அலங்கரிக்கின்றார்கள்.

வட இலங்கைச் சங்கீத சபை ஆண்டுதோறும் தரப் படுத்தப்பெற்ற சங்கீத பரீட்சைகள் நடத்திச் சான்றிதழ் கள் வழங்குகின்றது. ஆறாண்டுகள் முறையாகப் படித் தவர்கள் ஆறும் பரீட்சையிற் சித்தியெய்தி ஆசிரிய தரா தரம் பெற்றுச் சங்கீத ஆசிரியராய்க் கடமையாற்றும் வாய்ப்பினைப் பெறக்கூடியவராகப் பரீட்சை முறைகள் வகுக்கப்பெற்றுள்ளன. தமிழ்நாட்டுப் பேராசிரியர்களும் பரீட்சகர்களும் காலத்துக்குக்காலம் இங்கே வந்து பரீட் சித்துப் பரீட்சார்த்திகளின் பாண்டித்தியத்தைப் பாராட் டியும் போகின்றார்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வருகைபுரிந்த இரவீந்திரநாத்தாகூர், இங்கே கவிதை, சங்கீதம், நாட்டியம், நாடகம், சித்திரம், சிற்பம் முதலிய நுண்கலைகள் விருத்தியடைந்து வருந்திறனை நேரிற்கண்டு நன்கு பாராட்டியுள்ளார்.

எழுபதாண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பெற்ற யாழ்ப் பாணம் சரஸ்வதி விலாசசபை என்னும் நிறுவனம் நாடக வளர்ச்சிக்காகப் பணிபுரிந்து காலந்தோறும் தர மான நாடகங்களை மேடையேற்றிப் புகழ்பெற்றுள்ளது. இவர்கள் நடித்த நமசிவாயம் அல்லது நான்யார் என் னும் நாடகத்தை அக்காலத்து நீதியரசர் கனம் அக்பர் பெரிதும் பாராட்டியுள்ளார்.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் 1933 ஆம் ஆண்டில் தனது பன்னிரண்டாம் ஆண்டுவிழாக் கொண் டாடிய வேளையில், தலைமைதாங்கிய விபுலானந்த அடிக ளார், நீலகண்ட யாழ் மரபு என்னும் நீண்டதொரு ஆராய்ச்சிப் பேருரை நிகழ்த்தியமை இன்றும் நெஞ்சில் நிலைத்துள்ளது. யாழைச் சிதைத்தவர்கள் மகாராஷ்டிர சங்கீத வித்துவான்களாயிருத்தல் வேண்டும் என்று அடி களார் அன்று கூறினார்.

சிலப்பதிகாரத்தில் கானல்வரிக்கு எழுந்த உரையில் யாழின் இயல்பு விளக்கப்பெற்றுள்ளது. இன்னும் பத்துப் பாட்டு என விளங்கிய தொகுப்பில் பெரும்பாணாற்றுப் படை, கூத்தராற்றுப்படை, பொருணராற்றுப்படை முத லிய பாணாற்றுப்படை நூல்களில் சகோடயாழ், செங் கோட்டி யாழ் முதலிய யாழினங்கள் கூறப்பெற்றுள்ளன.

விபுலானந்த அடிகளார் 1933-ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் நடைபெற்ற வட இலங்கைச் சங்கீத சபையின் கூட்டமொன்றில், பூர்வீக தமிழ்ச் சங்கீதம் என்னும் பொருள்பற்றி அரியதொரு ஆராய்ச்சிப் பேருரை வழங் கினார். அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தகாலத்தில், கணித சாத்திரமுகத் தாலும், பிரகிருதி சாத்திரமுகத்தாலும் ஆராய்ந்து கண்ட முடிபுகளை ஆதாரமாகக்கொண்டு பேசினார்கள்.


அடிகளார் பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய பழைய தமிழ் நூல்களிலிருந்து பல அடிகளை உதாரணத் துக்கு ஆண்டு எடுத்துக்கூறி விளக்கினார்கள். மேலும் யாழுக்கும் வீணைக்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கிய பின், யாழின் உருவ அமைப்பைக் கரும்பலகையில் வரைந்து விபரித்தார்கள்.

★ பண்ணின் பயனாக உள்ளது இசை ★

தமிழ்நாட்டிற் பண்டைக்காலத்தில் வழங்கிய ஏழு சுரங்களிலிருந்தே பன்னிரண்டு சுரஸ்தானங்கள் தோன்றின என்பர். அவற்றின் சலனத்தால் இருபத்திரண்டு சுருதிகள் பிறக்கலாயின. சாரங்கதேவர் என்பார் 1220-ஆம் ஆண்டிற் செய்த சங்கீத ரத்னுகரம் என்னும் நூலிலும், வேங்கடமகி என்பார் 1660-ஆம் ஆண்டிற் செய்த சதுர்த் தண்டிப் பிரகாசிகை என்னும் நூலிலும் திராவிட சங்கீதம் குறிக்கப்பெற்றுள்ளது என்பர்.

## வீணை வித்தகர்கள்

நரம்புக் கருவிகளுள் ஒன்ருன வீணை கலைமகள் கையில் இருக்கும் பாக்கியம் பெற்றது. இது தம்பூராவின் அமைப்பினையுடையதாயினும், ஒரு சில மாற்றங்கள் அமைந்துள்



ளதாகும். மேற்பக்கத்தில் சுரைக்காயும், வளைந்தபகுதியில் யாளியின் தலையும் அமைந்திருக்கும்.

கலைமகளான சரசுவதியேயன்றி விசுவாவசு, தும்புரு, நாரதர் ஆகியோரும் வீணையேந்திப் புகழ்பெற்றவர்கள். தமிழ்ப்புராணங்களிலும் திருமுறைகளிலும் வீணை என்னும் வாத்தியம் அதிகமாக வழங்கிவருகிறது. சங்கீத ரத்னுகரம் என்னும் நூலில் நான்குவகையான வீணைகளின் தரம் கூறப்பெற்றுள்ளது. அவை பிரகதி, களாவதி, மகதி, கச்சபி என்பவைகளாம். அவற்றின் ஆசிரியராஞேர் விசுவாவசு, தும்புரு, நாரதர், சரசுவதி யாவர் என்பர்.

வீணை வாத்தியம் தமிழ்நாட்டில் வியாபகமாகிப் பரந்து இசைக்கப்பெற்றுவந்துள்ளது. விற்பத்திமான்களாய நிபுணர் சிலர் வீணையால் புகழ்பெற்றுள்ளனர். கலியாணகிருஷ்ணஐயர் அவர்கள், சேஷண்ணு சுப்பண்ணு அவர்கள், வேங்கடரமணதாஸ் அவர்கள், தனம்மாள் அவர்கள், இன்னும் காரைக்குடி சகோதரர்கள் முதலாஞேர் வீணையால் புகழீட்டிய பெரியவர்களாவர்.

எங்கள் நாட்டில் இன்றைய இளஞ்சந்ததியினருள் பெண்கள் சிலர் வீணையில் புகழ்பெற்று வருகிருர்கள். சேர் இராமநாதன் பெயரில் நிலவும் கலைக்கூடத்தில் வீணையின் ஒலி வெகுநன்ருக ஒலித்து வருகிறது.

## வாத்தியங்கள் பரவிய விந்தை

சங்கீத வாத்தியங்கள் பெரும்பாலும் இந்தியாவில் அதிலும் தமிழ்நாட்டில் உருவாகி, ஆசிய நாடுகள் எங்கும் பரவி, ஐரோப்பாவெங்கும் பரவின. சில வாத்தியங்கள் உருமாறியும் உலாவந்துள்ளன. அவ்வாத்தியங்களுள் நரம்புக் கருவிகள் என்னும் தந்தி வாத்தியங்கள் தமிழ்நாட்டிற் பெரும் புகழ்பெற்று உலாப்போந்தன. இராவணுஸ்திரம் என்று புகழ்பெற்ற தந்திவாத்தியம் ஒன்று வில்லின் அமைப்பிலிருந்தது என்பர். அதன் நரம்புகள் மான் நரம்புகளாகும்.

## காசியின் பெருமை

(நூருண்டுகளுக்கு முன்னர் காசிக்குச் சென்ற ஆழ்வாரப்பிள்ளை என்பார் பாடியது)

எங்குஞ் சிவலிங்கம் எங்கும் சிவாலயங்கள்
தங்குமிட மெல்லாம் சத்திரங்கள் — அங்கங்கே
கட்டும் படித்துறைகள் கங்கைசூழ் காசிநகர்
கிட்டாது பாவிகளுக் கே.

## மிருதங்கம் என்னும் மத்தளம்


தோல் வாத்தியங்களுள் ஒன்ருன மிருதங்கத்தின் பழைய பெயர் மத்தளம். ''மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத'' என்று ஆயிரத்துநூறு ஆண்டுகளுக்கு முன்பே மத்தளம் ஒலித்ததை நாச்சியார் பாடியுள்ளார். மத்து என்பது ஓசையின் பெயர் என்பர். மத்து + தளம் மத்தளமாயிற்று. மார்ச்சனை என்னும் ஒருவகை மண்பூசப் பெறுவதால் மிருத் என்னும் மண்ணின் அடியாக மிருதங்கம் என வந்தது என்பர். இதற்கு நான்முகன் என்றும் ஒரு பெயர். தோற்கருவிகளுள் தனிமையாக வாசிக்கவும் ஆவர்த்தம் கேட்கவும் ஆனந்தமளிப்பது மத்தளம். மத்தளம் நந்தியெம்பெருமான் கையில் ஒலிக்கிறது. நந்தி மத்தளம் கொட்ட நடராசப்பெருமான் ஆடுகின்ருர் என்பர்.

இசைக்கு ஆதாரமாகவுள்ளது நாதம்

இந்தியாவின் இணையற்ற விஞ்ஞான மேதையான சேர். சந்திரவெங்கடராமன் (C. V. இராமன்) மத்தளத்தில் ஆராய்ச்சி செய்து அதில் அநேக சுரங்கள் உண்டாக வழியுண்டு என்று கண்டுகூறியுள்ளார். மத்தளத்தின் நாதம் ஏழு சுர நாதம் என முன்னர் கண்டுகூறியவர் கோளகமுனி என்பர்.

## முழவும் சில்லும் குழலும்

மக்கள் நாகரிகமுற்று வாழ்ந்த காலத்தில் முதலிற் கண்டுபிடித்தவற்றுள் சில்லின் உபயோகமும் ஒன்று. சில்லுகள் பூட்டிய வண்டிகளில் மாடுகளைப் பூட்டியோட்டிய தமிழன் சில்லின் அமைப்பையும் அழகையும் குறிக்கும்போது முழவின் முகப்பை உவமை கூறுமளவில் சில்லிலும் பார்க்க முழவு தமிழர் வாழ்வில் பழைமை வாய்ந்தது. ''கொழுஞ் சூட்டருந்திய திருந்து நிலையாரத்து'' என்று வண்டிச்சில்லின் சிலைக்கம்புகளின் அழகை வருணித்தபின், ''முழவினன்ன உருளி'' என்று முழவின் மேற்புறத்தில் வட்டம் வரைந்து நடுவில் பொட்டிட்ட முகப்பை உவமை கூறும் பாடல் சங்க இலக்கியத்தில் வருகிறது.



கூத்தாடிகள் மூங்கில் முளைகளை நேராக வளரவிட்டதும், அவை முற்றிய காலத்தில் வண்டுகள் அவற்றில் துளைகளிட்டமையும், அத்துளைகள் வழியாக காற்றுப் புகுந்து ஒலியெழுப்பியதும், புல்லாங்குழல் பிறக்க வழி காட்டிய சம்பவம் ''ஆடலுக்கமைந்த அவிர்துளை மருங்கில் கோடை புகுந்து குழல்'' எனவரும் சங்கப் பாடலாலறியக்கிடக்கிறது.

## பீரம்பேணி பாரம் தாங்கும்

தாய்ப்பால் குடித்து வளர்ந்த குழந்தையின் நல்லியல்புகளை மூதாட்டியாய ஒளவையார் என்றோ எப்பவோ மிகச் சுருக்கமாக வற்புறுத்திப் பாடியுள்ளார். பன்னூறாண்டுகளுக்குப் பின்னர் மனோதத்துவ நிபுணர்களும் வைத்திய விற்பன்னர்களும் தாய்ப்பாலின் குணவிசேடங்களை ஆராய்ந்து அறிந்து இன்று பிரசாரஞ் செய்கின்றார்கள். பகுத்தறிவில்லாத மிருகங்கள் பாலூட்டிகளாக வாழும்போது, நவநாகரிக மோகந் தலைக்கேறிய நம்மவருட் சிலர் தங்கடமையைப் புறக்கணித்துத் தாம்பெற்ற பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பழுதாக்குகின்றனர்.

தாய்ப்பால் குடித்தபிள்ளை நன்றாகப் படிக்கும் என்று விஞ்ஞானிகள் மேற்கு நாடுகளில் இப்போதுதான் முழக்கஞ் செய்து வருகின்றார்கள். தாய் தன் குழந்தைக்கு இரங்கிப் பாலூட்டும்போது கொண்டுள்ள மனநிலை பிள்ளைக்குப் பெருஞ்சாதகமாக மானசீகமாகப் பயன்தருகின்றது. குழந்தைக்குத் தாய்ப்பாலில் அமைந்துள்ளவை பசுப்பாலிலாயினும் மாப்பால்களிலாயினும் அமைவதில்லை என்பர்.

## உங்களுக்குத் தெரியுமா?


(விடைகள் வேறிடத்தில்)

1. இசைக்கருவிகள் என்பன யாவை?
2. சரஸ்வதி வீணைக்குரிய மரம் யாது?
3. ருத்ர வீணைக்குரிய பிரதேசம் யாது?
4. ருத்திர வீணைக்கு வழங்கும் பெயர் யாது?
5. சரஸ்வதி வீணைக்கும் ருத்ர வீணைக்கும் பேதம் யாது?
6. மிருதங்கத்துக்குரிய மரம் யாது?
7. ஏழு சுரங்களின் தமிழ்ப் பெயர்கள் யாவை?
8. தாளம் எத்தனை வகைப்படும்?
9. சங்கீதக் கச்சேரி: கச்சேரி எந்த மொழியில் வந்தது?
10. சங்கீதத்துக்கு அடிப்படையானது யாது?
11. சங்கீதம் என்பது எதைக்குறிப்பது?
12. நாதஸ்வரத்தின் இரு இனங்கள் எவை?
13. மிகப்பழைய தாளங்கள் எவை?
14. ஸ்வரம் என்பதன் தமிழ்ப் பெயர் யாது?
15. வங்கியம் என்பது யாது?
16. மூவர் தேவாரத்தில் இல்லாத பண் திருவிசைப்பாவில் உள்ளது. அதன் பெயர் என்ன?
17. திருமுறைகளில் எத்தனை பண்கள் உள்ளன?
18. யாழின் முதல் நரம்பின் பெயர் என்ன?
19. உபலய வாத்தியங்கள் என்பன யாவை?
20. சுருதி கூட்டவோ குறைக்கவோ முடியாத கருவி எது?

★ இசை நாதத்தாலும் சுருதியாலும் பிரகாசிக்கும் ★

## வழக்கிலுள்ள வடமொழிகள் சில

| | | |
|---|---|---|
| பதி | — | கடவுள், தலைவன், கணவன் |
| பசு | — | உயிர் |
| பாசம் | — | தளை, உலகம் |
| பதிவிரதம் | — | கற்பு |
| பதிவிரதை | — | கற்பரசி |
| பதுமநாதன் | — | திருமால் |
| பதுமம் | — | தாமரை |
| பதுமை | — | பாவை |
| பதுமன் | — | நான்முகன் |
| பதுமாவதி | — | திருமகள் |
| பக்தகணம் | — | அன்பர் கூட்டம் |
| பக்தர் | — | தொண்டர் |
| பத்தி | — | நேயம், பற்று |
| பத்திமார்க்கம் | — | அன்புநெறி |
| பத்திரம் | — | இலை |
| பத்தியம் | — | மருந்து உணா |
| பத்திரிகை | — | செய்தித்தாள் |
| பந்தம் | — | கட்டு, உறவு |
| பந்தி | — | வரிசை |
| பந்துக்கள் | — | உறவினர் |
| பந்தசாலை | — | இலைக்குடில் |



### பஞ்சதந்திரம்

ஒருவன் பலசாலியாகவும், புத்திசாலியாகவும் இருந்த போதிலும் தானாகப் பகையை உண்டாக்கிக் கொள்ளக் கூடாது. ஊரில் வைத்தியன் இருக்கிறான் என்பதற்காகக் காரணமின்றி விஷத்தைக் குடிப்பார்களா?

சபைநடுவில் அறிவாளி ஒருபொழுதும் பிறரை நிந்திக்கவே கூடாது. நீ பேசுவது உண்மையான பேச்சாக இருந்தாலும் வருத்தமளிப்பதானால் அதைப் பேசாதே.

ஆப்த நண்பர்களுடன் அடிக்கடி கலந்தாலோசித்து சுயபுத்தியையும் செலுத்தி ஆராய்ந்து பார்த்துக் காரியத்தில் ஈடுபடுகிற புத்திசாலியிடம் தான் செல்வமும் கீர்த்தியும் சேரும்.

புதிதாக வேலைக்கு வந்தவனின் அடக்க ஒடுக்கம், விருந்தாளியின் புகழ்ச்சி, பெண்களின் கண்ணீர், போக்கிரிகளின் பேச்சுத்திறமை, இவை புத்திசாலியையும் வஞ்சிக்கக்கூடியவை.

பலபேர்களைப் பகைத்துக்கொள்ளலாகாது. ஒரு கூட்டத்தை வெல்லமுடியாது. பாம்பு எவ்வளவோ துடித்துப் பார்த்தும் எறும்புகள் அதை மொய்த்துத் தின்றுவிடுகின்றன.

## Great Sayings

1. Fools think revenge is sweeter than life.
2. A thing of beauty is a joy for ever.
3. Beauty is truth, truth is beauty.
4. It is double pleasure to deceive the deceiver.
5. Better a living begger than a burried emperor.
6. Borrowing is not much better than begging.
7. In all cases think for yourself.
8. The ballet is stronger than the bullet.
9. To live by medicine is to live horribly.
10. All men are liable to error.
11. A word to the wise is enough.
12. Wisdom is only found in truth.
13. Better unborn than untaught.
14. Nothing is impossible to a willing heart.
15. A picture is a poem without words.

முற்றொடர்:

## தமிழில் வழங்கும் ஆங்கிலச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 37. | கவர் | — | Cover |
| 38. | கவணர் | — | Governor |
| 39. | கவண்மென்ற் | — | Government |
| 40. | கவுண் | — | Gown |
| 41. | கொன்றாக்றர் | — | Contractor |
| 42. | கொன்வென்ற் | — | Convent |
| 43. | கொங்கிரஸ் | — | Congress |
| 44. | கோப்பி | — | Coffee |
| 45. | கொப்பி | — | Copy |
| 46. | கார்டியன் | — | Guardian |
| 47. | காட் | — | Card |
| 48. | கார்ட் | — | Guard |
| 49. | கொலறா | — | Cholera |
| 50. | கிறான்ற் | — | Grant |
| 51. | கிறிமினல் | — | Criminal |
| 52. | கிறாக்கன் | — | Crack |
| 53. | கிறவல் | — | Gravel |

அறுபத்துநான்கு கலைகளுள் அருமையும் பெருமையும் இனிமையும் வாய்ந்தது இசைக்கலை.

° ° °

இசையாவது எழுத்தொலியை அடியாகக்கொண்டு பிறப்பதாய்ப் பண்ணுக்குக் காரணமாயுள்ள ஓசையாம்.

★ செவிப் பொறியால் உணரப்பட்ட நாதம் சுருதி ★

## தமிழ் நாட்டன்பர்களுக்கு நன்றி

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகைபுரியும் தமிழன்பர்களுள் பலர் யாழ்ப்பாணம் வந்து, பலவிடங்களையும் பார்த்துப் போகும் போது, மில்க்வைற் மனையாகிய திருவாலவாய் என்னும் இல்லத்திற்கும் வருவது வழக்கமாகிவிட்டது. இங்கே வந்து போனவர்கள் சிலர் மாதந்தோறும் தங்கள் அயலில் உள்ள திருக்கோயில்களில் அருச்சனை செய்வித்துத் திருநீறு சந்தனம் முதலான பிரசாதங்களை ஒழுங்காகத் தொழிலதிபருக்கு அனுப்பிவருகிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் ஒரே இடத்தில் ஒரே முறையில் ஒரே சொல்லில் நன்றி.

## நாயன்மார் குருபூசை

சைவம் வளர்த்த நாயன்மார்களுள் தேவார முதலிகளாய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவரோடு; திருவாசகம் பாடியருளிய மாணிக்கவாசக சுவாமிகளையும் உட்படுத்திச் சமய குரவர் நால்வர் எனப் போற்றி, அவர்கள் முத்தியடைந்த தினங்களில் குருபூசை செய்து வருவதில் பாடசாலைகள் பயபக்தியுடன் ஈடுபடுவதை நேரிலறிந்து உள்ளம் பூரித்த முறையில், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அத்தனை பேரையும் பாராட்டுகிறோம்.

## வடக்கில் ஒரு பெரிய கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் நெடுஞ்சாலை ஒரத்தில், ஆவரங்கால் பதியில், அழகும் அமைதியும் வாய்ந்த நல்ல சுற்றாடலில், தெய்வ நம்பிக்கையும் இறை விசுவாசமும் உள்ள சைவப் பெருங்குடி மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற பெரிய ஊரிற் கோயில் கொண்டருளியுள்ளவர், பர்வதவர்த்தனியம்மை சமேத நடராசா இராமலிங்கசுவாமி என்னும் திருநாமம் வழங்கும் சிவபெருமான்;

பல்லாண்டுகளாகப் பழுதுபட்டுக் கிடந்த கோயிலையும் சுற்றுமதில்களையும் புனருத்தாரணஞ் செய்ய முயற்சியெடுக்காத சிவனடியார்கள் பெருந்தொகை பணஞ் செலவு செய்து பூங்காவனம் முதலிய அலங்காரத் திருவிழாச் செய்வதில் நாட்டம் மிக்கவராயிருந்து வந்தனர்;

இன்று திருவருள்பாலிப்பச் சிவனடியார் திரள் திரளாக ஒன்று கூடி மிகப் பெரிய அளவில் அகன்றமுறையில் அனைத்தையும் பழுதுபார்த்துக் கோபுரங்கள், விமானங்கள், கோட்டங்கள், மண்டபங்கள் மதில்கள் யாவற்றையும் கலைச்சிறப்பு களிநடனஞ் செய்யும் வண்ணம் திருத்தியமைத்துக் கும்பாபிடேகஞ் செய்ய ஒழுங்கு செய்தனர்.

விமானங்கள் தோறும் பன்னிறந் தீட்டப் பெற்ற சிற்பத் திருவுருவங்கள் கண்கவர் தன்மையில் அமைந்துள்ளதோடு, பார்த்த கண்ணை எடுக்கவிடாமல் பற்றியீர்க்குமளவில் அமைந்துள்ளன. சைவத் தமிழ் மக்கள் இத்தகைய வேலைப்பாடமைந்த புனருத்தாரணத்தைச் சென்று பார்த்துச் சிந்தை குளிர்தல் வேண்டும்.

இற்றைக்கு ஐந்நூறாண்டுகளுக்கு முன்னரே இராமநாத உடையார் என்பார் காசியிலிருந்து கொண்டு வந்த சுவாமியை ஆவரங்காலில் சிவாலயம் அமைத்து எழுந்தருளச் செய்தார். இங்கெழுந்தருளிய இறைவனைத் தினந்தோறும் ஆகமமுறைப்படி அபிடேகம் அர்ச்சனை ஆராதனை செய்வதற்குக் காசியிலிருந்து கங்கபட்டர் குடியில் வந்த அந்தணப் பெரியாரையும் அழைத்து வந்தார்.

வரலாற்றுப் புகழ் பெற்ற திருக்கோயில் என்னும் சிறப்புப் பெறுவதற்குரிய நிகழ்ச்சிகள் இத்திருக்கோயிலுக்கு உண்டு. சைவக் கோயில்களைத் தரைமட்டமாக்குவதையே தொழிலாகக் கொண்ட பறங்கியர் இத்திருக்கோயிலை எட்டியும் பார்க்கவில்லை; அவர்களுக்குப் பின் வந்த ஒல்லாந்தர் இத்திருக்கோயிலை தாங்கள் தயாரித்த பேரேடு என்னும் தோம்புப் பதிவிலும் எழுதியுள்ளார்கள்.

பர்வதவர்த்தனியம்மை சமேத நடராச இராமலிங்கப் பெருமான் திருக்கோயிலில் அமைந்துள்ள தேவ சபையும் பரிவாரமூர்த்திகளும் தெய்விகச் சிறப்புள்ளவர்கள். வடக்கில் காசி, தெற்கில் இராமேஸ்வரம், மத்தியில் இருதயஸ்தானமாயமைந்த சிதம்பரம் ஆகிய முப்பெரும் திருத்தலங்களின் சம்பந்த சமஸ்டி ஆவரங்காலில் அமைந்துள்ளது.

இங்குள்ள பரிவாரமூர்த்திகளும் அவர்கள் எழுந்தருளியுள்ள கோட்டங்களும் மண்டபங்களும் மிகவும் அழகானவை. விநாயகர், முருகன், தட்சணாமூர்த்தி, வைரவர், நவக்கிரகங்கள், சண்டேசுரர் ஆதியோர் அழகொழுக எழுந்தருளியுள்ளார்கள்.

கோயிலைச் சேர்ந்த வசந்த மண்டபம், உட்பிராகாரம், களஞ்சியம், மடைப்பள்ளி, மணிக் கோபுரம் முதலியனவும் அழகாகவும் அமைவாகவும் உள்ளன. இத்திருக்கோயிலுக்குப் புதிதாக ஒரு பெரிய மணி உருவாக்கப் பெறுகிறது போற்றற்குரிய செயல். சிவனடியார்கள் எங்கு வாழ்பவராயினும் இத்திருக்கோயிற் பணிகளை நேரிற் பார்த்து மகிழ்ந்து தங்கள் உபகரிப்பை நல்குதல் வரவேற்கத்தக்க உபயமும் கைங்கரியமுமாகும்; எனவே பக்தர்கள் அங்கு விரைவார்களாக.

இத்திருக்கோவில் சம்பந்தமாக அண்மைக் காலத்தில் நிகழ்ந்த ஓர் அற்புதம் ஊரவர் நினைவில் உள்ளது. துறவு பூண்டு தவவொழுக்கத்தில் காசிப் பதிக்குச் சென்று வாழ்ந்து கொண்டிருந்த அம்மையார் ஒருத்தியின் கனவிலே தோன்றிய காசி விசுவநாதப் பெருமான், ''உனக்குக் காசி ஆவரங்காலில் உள்ளது; நீ அங்கு சென்று என்னை வழிபட்டுக் கொண்டிரு'' எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

அம்மையார் இங்கே மீண்டு வந்து திருக்கோயிற் சூழலில் வாழ்ந்து, திருநந்தவனத்தை விசாலித்து, வீதிகளைக் கூட்டிப் பெருக்கி இன்னும் பல கைங்கரியங்களைச் செய்து கொண்டிருந்தார் என்பர்.

நிகழும் துந்துபி ஆண்டு ஆனி மாதம் பதினாறுந் திகதி (30-6-1982) புதன் காலை நிகழ்ந்த மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் சங்காபிஷேகம் யாவும் முறையாக நடைபெறுமளவில் திருவருள் பாலிக்கப்பெற்றுள்ளமை எல்லோருக்கும் பெரிய வரப் பிரசாதமாகும். திருப்பணிச் சபையினரின் பாரிய முயற்சியைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இத்தகைய புனருத்தாரணம் பிற தலங்களிலும் நடைபெறுவனவாகுக.

**சுருதியைக் கேள்வி என்று தமிழர் வழங்கினர்**



## ஔவை அருந்தமிழ்

★

### கல்விச் செருக்கு ஆகாது எனப் பாடியது

படித்தவர் சிலர் செருக்குள்ளவராய் இருப்பது வழக்கம். பண்டிதர் என்றும், வித்துவான் என்றும், புலவர் என்றும், கவிஞன் என்றும் தற்பெருமையுள்ளவராய் இருந்தனர். அவர்களுக்கு நற்புத்தி கூறுவதற்கு சமயம் பார்த்து இருந்த ஔவையாருக்கு ஒரு நல்ல சமயம் வாய்த்தது.

ஒருநாள் புலவர் ஒருவர் தமது உள்ளங்கையில் சிறிதளவு மண்ணைப் பொத்தி வைத்துக்கொண்டு, ஔவையாரைப் பார்த்து, ''என் கைக்குள் என்ன இருக்கிறது என்று கூறுங்கள் பார்ப்போம்?'' என்று பெருமையோடு கேட்டார். அவருக்குப் பக்கத்தில் வேறு புலவர்களும் வித்துவான்களும் நின்றார்கள்.

இதுவே நல்லதருணம் எனக்கருதிய ஔவையார் புலவர்களைப் பார்த்து, ''புலவர்களே! கல்விக்கு எல்லை கிடையாது. படித்தவர்கள் நாவிலே பொருந்தி வாழ்கின்ற கலைத்தெய்வமாகிய சரஸ்வதி தேவியானவள்தான் கற்ற கல்வி ஒருபிடி மண்ணளவு உள்ளது என்றும், கற்காமல் இன்னும் இருப்பது இந்த உலகமளவானது என்று கருதி, இன்னமும் படித்துக்கொண்டே இருக்கிறாள். ஆதலால் நீங்கள் வீண்பெருமை கொள்ளவேண்டியதில்லை. சின்னஞ் சிறிய எறும்புக்குக்கூட ஒரு பெருமையுண்டு. அதுவும் தன்கையால் அளக்கும்போது அதன் உடம்பு எட்டுச்சாண் நீளமுள்ளதுதான்'' என்றார். புலவர்கள் செருக்கு அடங்கித் தெளிந்து நல்லவரானார்கள்.

கற்றதுகை மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள் — மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்.

---

# SITA

(SWAMI SIVANANDA)

Sita is the wife of Rama. She is the daughter of king Janaka. She is the heroine of Ramayana. She is the most virtuous and pious lady the world has ever produced. She is still a model for Indian girls.

She was pure, simple and highly devoted to Rama. She was an ideal wife. She was an embodiment of endurance and austerity. She faced the ordeal of fire. In Sita, beauty was blended with purity, simplicity, devotion and sacrifice.

May you all shine like Sita! May you all imbibe the virtuous qualities of Sita! May her blessings be upon you all!

---



## வாழவைக்கும் வாழை

கடின உழைப்பும் மிகுந்த பிரயாசையும் உள்ள யாழ்ப்பாணத்துக் கமக்காரருக்கு வாழை ஒரு வரப்பிரசாதப் பயிர். அதை வாழவைக்கும் வாழை என வாயாரப் போற்றுவர்.

உரும்பராய், ஊரெழு, கோப்பாய், நீர்வேலி முதலிய ஊர்கள் வாழைச் செய்கைக்குப் பெயர்போனவை. இணுவில், சுன்னாகம், மாவிட்டபுரம் முதலிய இடங்களும் வாழைச் செய்கையாளரின் அனுபவம் நிறைந்தவையாகும்.

வாழைச் செய்கையைப்பற்றி இன்றைய தமிழ்நாட்டு வேளாண்மை வித்தகர்கள் கண்டுபிடித்த அற்புதமான அனுபவங்கள் மிகவும் உபயோகமானவை. கிளிநொச்சி, முழங்காவில் முதலிய குடியேற்றங்களில் வாழ்வை மலர்த்தும் விவசாயிகள் தமிழ்நாட்டு முறைகளைப் பின்பற்றினால் வாழைச் செய்கையில் பெரும் பயன்பெறலாம்.

வாழையில் ஏறக்குறைய எண்பது இனங்கள் உள்ளன என்பர். இவையாவும் பெரும்பாலும் தை, மாசி மாதங்களிலும் ஆடி மாதத்திலும் நாட்டப்பெறுகின்றன. வாழை வளர்வதற்கு உவர் நிலமும் களர் நிலமும் உபயோகம் இல்லாதவை.

வாழைச் செய்கைக்குச் செம்மண் தறையும் இருவாட்டித் தறையும் மிகவும் நல்லனவாகும். வாழைகளுள் பூவன், மொந்தன் ஆகிய இனங்கள் வரட்சியை ஓரளவுக்குத் தாங்கி வளரும் தன்மை உள்ளவையாகும். றொபெஸ்ரா என்னும் வாழையினம் ஏற்றுமதி செய்வதற்குப் பயன்படுகிறது.

பொதுவாக வாழைக்குட்டிகளை நாட்டும்போது உயரமான இனங்களாயின், அவற்றின் இடைவெளிகள் ஏழு அடி தூரமாகவும், குள்ளமான இனங்களாயின் இடைவெளிகள் ஐந்து அடி தூரமாகவும் நாட்டலாம் என்பர்.

வாழைக்குட்டிகளை நாட்டும் கிடங்குகள் பொதுவாக ஒன்றரை அடி நீளம், ஒன்றரை அடி அகலம், ஒன்றரை அடி ஆழம் உள்ளனவாக அமைதல் நன்மைதரும் என்பர்.

---

★ சுரங்கள் ஏழும் சங்கீதத்தின் முதற்பாடமாகும் ★

வாழை நம்மை வாழவைப்பதோடு நமக்கு மங்கள கரமாகவும் விளங்குகிறது. விழாக்கள், கிரியைகள் யாவற்றிலும் அலங்காரமாகவும் அடையாளமாகவும் கட்டப்பெறும் வாழையினங்கள் நமக்குப் பெருந்தொகையாக உண்டாகவேண்டும்.

முக்கனிகளில் ஒன்முன வாழைப்பழம், உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. குழந்தைகள் முதல் முதியவர் வரையும் எல்லோருக்கும் வாழைப்பழம் சிறந்த சத்துணவாகும் என்பது எல்லோருக்கும் தெரியும். வாழைப்பழம் இல்லாத விருந்து நிறைவுபெறுவதில்லை. சுருங்கச்சொல்லில் நாம் வாழைச் செய்கையில் இன்னும் அதிக கவனம் எடுப்போமாக. கூடிய கவனமெடுத்து அதிக உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோமாக.

## நன்னாரி

சித்த வைத்தியர் மெத்தப் புகழும் மூலிகைகளுள் நன்னாரியும் ஒன்று. எங்கும் படர்ந்து பயன்தரும் நன்னாரியின் வேர் நறுமணங் கமழும் ஒளடதமாகும். நன்னாரியின் உபயோகம் கருதி, அதற்குப் பல பெயர்கள் உண்டாகியுள்ளன.

நறுநெட்டி, கோபாகு, சாரியம், பாற்கொடி, நீறுண்டி, கானனுசாரி, கிருஷ்ணவல்லி, சாரிபம், பாதாளமூலி முதலிய பெயர்களைவிட சுகந்தி என்று தெலுங்கு மொழியிலும், சரிபா என்று வடமொழியிலும் பெயர் பெற்றுள்ளது.

நன்னாரி தேடுவாரற்ற தரைகளில் தானே உண்டாகிப் படரும். நன்னாரி வேர் வெளியில் கறுப்பாயும் உள்ளே வெள்ளையாயும் இருக்கும். காய்ந்த வேரும் கமகம என மணங்கமழும்.

நன்னாரி வேரை உடல் தேற்றி, உரமாக்கி, உள்ளழலாற்றி, சிறுநீர் பெருக்கி, வியர்வை பெருக்கி என்றெல்லாம் வைத்தியர்கள் போற்றுவர்.

நன்னாரி வேரினுல் பித்தநோய் நீங்கும். இதை வெந்நீரில் ஊறவிட்டுப் பருகி வந்தால், வாதநோய் குணமாகும். இன்னும் சருமரோகம், மேகப்படை முதலிய தோல் வருத்தங்கள் குணமாகும். அன்றி சமியாக் குணம் நீங்கும்.

சூடான பாலில் நன்னாரிப் பொடியும் சர்க்கரையும் கலந்து குழந்தைகளுக்குக் கொடுத்தால் நன்மையுண்டாகும். சிலர் சர்பத்துத் தயாரிப்பதற்கும் நன்னாரியை உபயோகிப்பது உண்டு.

## இரசிக ரஞ்சன சபா

யாழ்ப்பாணத்தில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இரசிக ரஞ்சன சபா என்னும் சங்கம் ஆண்டு தோறும் பெருந்திரளான பொதுமக்கள் முன்னிலையில் இசை விழா நடத்திப் புகழ் பெற்று வந்துள்ளது. உள்ளூர் வித்துவான்கள் பலர் மேடையேறிக் கச்சேரி செய்வதற்கு வாய்ப்பும் வசதியும் செய்துதவிய இரசிக ரஞ்சன சபாவின் சேவை பாராட்டுக்குரிய செயலாகும்.

## பண்ணிசை வல்லார் பெற்ற பாராட்டு

சாரங்கி வாத்தியத்தோடு தேவாரம் பண் தவருமல் பாடுவதற்குப் பயிற்சி பெற்ற காசிவாசி செந்திநாதையர் அவர்களைத் தந்த குப்பிழான், எங்கள் காலத்திலும் ஒரு மேதையைத் தந்தது.

''இசை வல்லார் சு. செல்லத்துரைப்பிள்ளைக்கு அளித்தது'' என்று ஒரு பக்கத்திலும், ''சைவசித்தாந்த சபை 1938 தூத்துக்குடி'' என்று மறுபக்கத்திலும் பொறிக்கப் பெற்ற தங்கப் பதக்கம் பெற்றவர் குப்பிழான் செல்லத்துரைப்பிள்ளை அவர்கள். தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை, திருவாளர் பொ. முத்தையாபிள்ளை அவர்கள் மூலம் பெரும் புகழ்பெற்ற நிறுவனமாகும். புகழ் பூத்த சைவ சித்தாந்திகள் எங்கள் நாட்டவரான இசைவல்லாரைப் போற்றியமை எமக்குப் பெரிய கௌரவம்.

## அண்ணுமலைப் பல்கலைக்கழகம் ஆற்றிய பெரும் பணி

ஈழநாட்டின் இசைப்பிரியர்களுக்குப் பெருவாய்ப்பாகவும் வரப்பிரசாதமாகவும் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தின் இசைக் கலைத்துறை அமைந்தது கடவுட்கொடையாயிற்று. ஈழத்திலிருந்து ஆண்டு தோறும் ஆண் பெண் என்னும் பேதமின்றி நம்பியரும் நங்கையரும் அங்கு சென்றுறைந்து வாய்ப்பாட்டும், வீணை முதலிய கருவிகளும் பயின்று இசைத் துறையில் முறுக்கேறி மீண்டனர். சிலர் அங்குள்ள பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் வியக்கும் வண்ணம் வித்துவத் தன்மை பூத்துத் தங்கப் பதக்கம் பரிசாகவும் பெற்று எங்கள் நாட்டுக்குப் பெருமை தேடித் தந்தனர்.

### அண்ணுமலை இசைக் கலைமன்றம்

அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் இசைத் துறை பயின்ற மாணுக்கருட் சிலர் தாம் பயின்ற பல்கலைக்கழகத்தின் உபகரிப்பையும் ஊக்கத்தையும் மறந்துவிடாமல் தங்களை ஆளாக்கிய அண்ணுமலைப் பல்கலைக்கழக நினைவாக அண்ணுமலை இசைக் கலைமன்றம் அமைத்து இருபத்தைந்து ஆண்டுகளாக இசைத் துறையைப் பரப்பி விருத்தி செய்து வருகின்முர்கள்.

## வீணை என வழங்கும் பிடில்

வீணையின் இடத்தை இன்று பிடில் என்றும் வயலின் என்றும் வழங்கும் வாத்தியக் கருவி பிடித்துள்ளது. இலேசாகக் கொண்டு திரியவும் வாசிக்கவும் பழுதுபார்க்கவும் வசதியான இக்கருவி இன்றைய சங்கீத மேடைகளில் பிரதான இடம் வகிக்கிறது.

இசையின் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவாகக் காட்டலாம் எனக்கண்ட இசைவல்லார்கள் இதனை உவந்தேற்று உபயோகித்து வருகின்முர்கள். இதனை முதன் முதலாக ஸ்ரீ பாலுசுவாமி தீட்சதர் பழகித் தமிழ்நாட்டில் வாசித்தார் என்பர்.

பிடில் வாத்தியம் மேற்கு நாட்டிலிருந்து இந்தியாவிற் புகுந்தது என்று கருதுவோர் ஒருபுறமாக, திரைப்பட

நடிகரும் இயக்குநரும் நாட்டியம் பத்திரிகையாசிரியருமான ரஞ்சன் என்பார், பிடில் இந்தியாவின் வாத்தியம் எனவே விளக்கி எழுதியுள்ளார். தமிழ்நாட்டில் பிடில் வாத்தியத்தில் திறமையுற்றோர் பலர் காலத்துக்குக்காலம் ஈழத்திற்கு வந்தும் எம்மவரை தங்கள் இசையால் இன்புறுத்தியுள்ளார்கள்.


எங்கள் நாட்டில் பிடில் என்றதும் புத்துவாட்டி சோமு என வழங்கிய சோமசுந்தரம் அவர்களின் பெயர் எல்லோருடைய நினைவிலும் எழுந்து அவரை நினைவு செய்வது வழக்கம். அவர் தமக்கென ஓரிடத்தினை அபிமானிகள் உள்ளத்தில் பிடித்திருந்தார்.

இற்றைக்கு ஐம்பதாண்டுகளுக்கு முன் வீணையோடு வீதியெங்கும் உலாப்போந்த வித்தகர் எம். சிவசிதம்பரம் என்பவர், அபிமானிகள் நாவில் பரம் எனவே வழங்கி வந்தார். அவர் தமது பிடில் வாத்தியம் ஒருபுறமாக, சங்கீதக் கலையை நாடெங்கும் மறுமலர்ச்சி செய்தல் வேண்டும் எனத் திடசங்கற்பம் பூண்டு தீவிரமாக உழைத்தார். பரம் ஒரு பரபரப்பையே வெகு விரைவில் உண்டாக்கி விட்டார்.

சங்கீதம் என்பது ஒரு வகுப்பாருக்கே உரியது மற்றவர் அதில் நாட்டங்கொள்ளலாகாது என்று நம்மவர் நம்பியிருந்த காலம் படிப்படியாக மறைய எல்லோரும் இசையார்வம் கொள்வாராயினர். அக்காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து இங்கே வருகைபுரிந்த சங்கீத மேதைகள் பலர் எம்மவரை இசைத்துறையில் மனம் திரும்ப ஊக்கமளித்தார்கள்.

சபேசையர், முசிரி சுப்பிரமணியஐயர், மருங்காபுரி கோபாலகிருஷ்ணஐயர், தஞ்சாவூர் பொன்னையாபிள்ளை முதலான வீணை வித்தகர் தம் கச்சேரிகள் இன்றும் இசைப் பிரியர்கள் காதில் இனித்துக்கொண்டிருக்கின்றன.

பரம் அவர்களைப்போலவே பரமசாமிஐயர், செல்லையாபிள்ளை, சபாரத்தினம் முதலானோரும் பிடிலும் கையுமாக எங்குந் திரிந்தனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகஞ் சென்று வீணை வித்தகராகி மீண்ட மீசாலை கு. வேலாயுத பிள்ளை அவர்கள் தம்மளவில் இசைத்துறையில் சேவை செய்துள்ளார்.



## Swami Sivananda MahaSamadhi Day

**14 - 7 - 82**

### Read & Remember

1. Learn patience, steadiness and endurance from the anvil.
2. As long as you live, long to learn. Be a student for ever.
3. Have the courage to act according to your conviction.
4. You are a descendent of your own past and you are a parent of your own future.
5. Knowledge should join hands with devotion.
6. Grasp the right thought at the right moment.
7. Give every man thy ear, but few thy voice.
8. Live for him who has brought you into this world to know Him.
9. Purity of mind depends upon purity of food.
10. Utilise every moment of your life well.


நீலம் தோய்க்கும்
வேலைச்சிரமம் வேண்டாம்

உங்கள் சீருடைகள்
மிகுந்த வெண்ணிறம் அடைவதற்குச்

★ சிறந்தவழி
★ சிரமமில்லாத வழி
★ சிக்கனமான வழி

ஒன்றே ஒன்றுதான்
அது




மில்க்வைற் நீலங்கலந்த நீலக்கட்டிகளை
உபயோகித்தலாகும்.


### பாடசாலைப் பிள்ளைகள்
### மில்க்வைற் தொழிலகத்தைப் பார்வையிடுதல்

பாடசாலைப் பிள்ளைகள் எங்கள் தொழிலகத்தைப் பார்த்துப்போவதை நாம் ஆதரிக்கிறோம். முன்கூட்டியே விண்ணப்பஞ்செய்து அநுமதிபெற்றவர்கள், தயவுசெய்து காலை எட்டுமணி முதல் காலை பத்துமணிக்குள்ளாகப் பார்த்துப்போவதானால் பிள்ளைகளுக்குத் தொழில்முறை விளக்கங்கூறுவதற்கு வசதியாகும்.

இசை சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என எழுவகைப்படும்.

★ சிவபெருமான் தாம் ஆடி உலகை ஆட்டுபவர் ★

# மகளிர் குழுவின் மகத்தான சேவை

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலி நீண்ட காலமாக மக்கள் சேவைக்குப் புகழ் பெற்று வருகின்ற ஊராகும். கூட்டுறவுத் துறையில் நல்ல பெயர் எடுத்த ஊரும் அதுவேயாகும். இன்றுள்ள நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்து மகளிர் பிரிவினர் வாரந்தோறும் செய்து வந்த சேவையின் சிகரம்போல ஒரு நாளாந்த சேவை அண்மையில் ஆரம்பிக்கப் பெற்றுள்ளது.

மகளிர் குழுத் தலைவி முதுமாணிப் பட்டதாரி திருவாட்டி ம. சண்முகதாஸ் அவர்கள் முயற்சியால் ஆரம்பிக்கப் பெற்ற பாலர் பாடசாலைக்குத் தொழிலதிபர் விஜயஞ் செய்து உபகரிப்புகள் நல்கி வாழ்த்தினர்.

# ஏழாலை மேற்குச் சனசமூகநிலையம்

ஏழாலை மேற்கிலுள்ள சரஸ்வதி சனசமூக நிலையத்துக்கு ஆண்டு பதினான்கு நிறைவுற்றது. அண்மையில் 12-6-82 சனிக்கிழமை நடைபெற்ற ஆண்டு விழாவில் புதுக்கிய நூல் நிலையத்தைத் திறந்து வைத்த தொழிலதிபர், அங்குள்ளவர்கள் மில்க்வைற் செய்திப் பழைய இதழ்களைப் பேணிப் பாதுகாத்து வைத்திருக்கும் முறையைக் கண்டு வியந்து பாராட்டி மேலும் ஊக்கமும் உபகரிப்பும் நல்கினர்.

## சித்தாண்டி - செங்கலடி
# சிவதொண்டன் சபை

யோகசுவாமிகளின் ஞானக்குழந்தையான இந்த நிறுவனத்தார் 1983ஆம் ஆண்டுக்குரிய திருமுறைப் போட்டியைப் பரந்த அளவில் நடத்துவதற்குத் திருவருள் பாலித்துள்ளது. மாணக்கர் மாணக்கியர் பெருந்தொகையாகப் பங்கு பற்றுவார்கள் என முன் யோசனையோடு கூடிய நிருவாகத்தர், இப்போட்டியை கிழக்கு மாகாணத்தின் திருக்கோணமலை, மட்டக்களப்பு, கல்முனை முதலிய பிரதேசங்களிலும் நடத்துவதற்கு யோசித்துள்ளார்கள். சிவதொண்டன் நிலையம் செங்கலடி கி. மா. என்னும் விலாசத்தில் விபரமறிந்து கொள்ளலாம்.

# சங்கீத ஆசிரியர்கள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முன்னாளில் பயின்று வந்த சங்கீதபூஷணப் பட்டதாரிகள் பலர் பின்னாளில் தேவாரப் பண் பயிற்சிபண்ணிச் சுத்தாங்கமாகவும் பண்ணுங்கமாகவும் திருமுறையோதப் பிள்ளைகளுக்குப் பயிற்றுகிறார்கள். அநுபவம் வாய்ந்த சமயபாட ஆசிரியர்கள் சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து பண்ணியல்பாகப் பத்திமையாலே காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதப்பயிற்சி கொடுக்கின்றனர், சமய பாடத்தில் விசேடசித்திபெறவும் வாய்ப்பளிக்கின்றனர்.


சங்கீத ஆசிரியர்கள் கீழ்வகுப்புகளில் சுருதிப்பெட்டி சகிதமாகவும், மேல்வகுப்புகளில் தம்புரா சகிதமாகவும் பாடப் பழக்குதல் வரவேற்கத்தக்க பெருஞ்சாதனையாகும்.

# கையில் வெண்ணெய் இருக்க....

கையில் வெண்ணெய் இருக்க ஊரெங்கும் நெய் தேடித்திரிந்தாற்போல, ஒரு அநுபவம் மில்க்வைற் தாபனத்திற்கு உண்டானது. பெருமளவில் மக்கள் சேவை செய்துவரும் றெட்பானா நிறுவனத்தாருக்கு எடுத்துச் செல்வதற்கு முருங்கைத்தடிகள் தேவையென்று திரிந்த வேளையில், மில்க்வைற் தாபனத்திலேயே பெருந்தொகையான முருங்கைத் தடிகள் கிடைத்தன. இவற்றை உபகரித்தவர் முன்னாள் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தரும், தற்சமயம் மில்க்வைற் தொழிலகத்தில் எழுதுவினையருமான திரு. க. சுப்பிரமணியம் அவர்களாவர்.

## உங்களுக்குத் தெரியுமா? விடைகள்.

1. தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி மிடற்றுக்கருவி (வாய்ப்பாட்டு) என்பனவாம்.
2. பலாமரம். 3. வடஇந்தியா 4. பின்
5. சரஸ்வதிவீணை யாளியும் குடுக்கையும் உள்ளது. ருத்ரவீணை இருபுறமும் குடுக்கை உடையது.
6. பலா. (பனை, சுரபுன்னை சிலவேளைகளில்)
7. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்
8. ஐந்துவகை: அவை த்ரயஸ்ரம், சதுரஸ்ரம், மிச்ரம், கண்டம், ஸங்கீர்ணம் என்பனவாம்.
9. பாரசீகமொழி (இன்றைய பாரசீகம் ஈரான்)
10. இராகம். 11. கீதம், வாத்தியம், நிருத்தம்.
12. பாரி, திமிரி. 13. கச்சத்புடம், சாசபுடம்.
14. இசை. 15. குழல். 16. சாளரபாணி.
17. இருபத்தைந்து. 18. தாரம் (காந்தாரம்)
19. கஞ்சிரா, கடம், முகர்சங்கு, டோலக், கொன்னக்கோல். 20. கடம்.



திருக்கோலக்கா சிவஸ்ரீ ராமநாதசிவாசாரியர் அவர்களுக்கு திருக்கோணேஸ்வர தருமகர்த்தா செல்வராசா அவர்கள் நவசண்டி ஹோமத்தின்பின் பொன்னாடை போர்த்தல். பக்கத்தில் தேவஸ்தான குரு சீதாராம சுப்பிரமணியக் குருக்கள்.

சட்சம் மயிலொலி போன்றது. ரிடபம் எருத்தொலி போன்றது. காந்தாரம் ஆட்டொலி போல்வது. மத்திமம் கிரௌஞ்சத்தொலி போல்வது. பஞ்சமம் குயிலொலி போல்வது. தைவதம் குதிரையொலி போல்வது. நிடாதம் யானையொலி போல்வது.

**★ இசைக் கலையின் பகுதிகளிற் சிறந்தது பல்லவி ★**

## சிமாட்டியின் விரல்

வெண்டைக்காயை ஆங்கிலேயர் சீமாட்டியின் விரல் என்று பொருள்படும் Lady's Finger லேடீஸ் பிங்கர் என வழங்குவர். உண்மையில் விரல்களின் அளவினதான புது இன வெண்டை ஒன்று தற்சமயம் இணுவில் அண்ணு கமத்தில் உண்டாகியுள்ளது. போதியளவு நெற்றுகள் சேர்ந்ததும் மில்க்வைற் அவற்றை உங்களுக்கு உபசரிப்பார்கள்.

## வஜனும்ருதம்

(சுவாமி கெங்காதரானந்தா)

1. கர்மரகசியம் தெரிந்தவனுக்கு வாழ்க்கை விளையாட்டரங்கம் போன்றது.
2. உன் மனக் குற்றம் மற்றவர்களின் குற்றமாகத் தோற்றமளிக்கிறது.
3. கண்கள் உலகத்தைப் பார்க்கும் சக்தி இழந்தாலும் தெய்வத்தைப் பார்க்கும் சக்தியை இழப்பதில்லை.
4. தார்மீக வழியில் தேடிய பணம் அவ்வழியில் செலவழிந்தால் பாவங்கள் தேய்ந்துவிடும்.
5. நல்லதாயினும் அது நல்லோர்களிடத்திலேயிருந்து வரவேண்டும்.
6. உண்மை இருக்கும் இடத்தில் அழகும் இளமையும் பொழியும்.
7. மனம் எப்பொருளில் கலந்திருக்கிறதோ அப்பொருளின் வடிவம் கொள்ளும்.
8. தர்மத்தை உணர்ந்து அதன் வழி நில்லாதவருக்கு ஞானம் என்பது பிறப்பதில்லை.
9. எங்கு பண்பு குறைந்திருக்கிறதோ அங்கே தருமம் இல்லை. தருமத்தின் செயலுருவம்தான் பண்பு.
10. தர்மசிந்தனை அடிமனத்தில் பதியாதவர்களுக்கு நன்மக்கள் பிறப்பதில்லை.

## ஓசை ஒலியெல்லாம் ஆனாய்நீயே!

உலகுக்கு ஒருவனாய் எங்கும் நீக்கமற நிறைந்து வியாபித்து நின்றருள் புரியும் இறைவனை முத்தமிழின் மையமான இசையிற்கண்ட திருமுறையாசிரியர்கள் ஓசை ஒலியெலாம் ஆனாய்நீயே என்றும், பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி என்றும், பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி என்றும் பண்ணாரும் இசையினோடு பாடியாடிப் பரவித் தொழுது உய்யும் நெறி காட்டியுள்ளார்கள்.

இறைவன் ஆடல் பாடல் வடிவத்தினன். இறைவி நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகி. பண்ணினை பண்ணில் நின்றதோர் பான்மைப் பழந்தமிழர் பக்தியொடு மலர்தூவிப் பாடியுள்ளனர். பக்தியில் இசை முக்கிய பங்குபெற்றுள்ளது. பக்தியில் உருகுகின்ற உள்ளத்தை விரைவில் உருகச்செய்வது இசை.

நாதவடிவான இறைவனுக்குத் தேவி நாதாம்பிகையாக உள்ளாள். இறைவனை ஏழிசையாகவும் இசைப் பயனாகவும் இன்னமுதாகவும் தேவார முதலிகள் கண்டனர். ஆயகலைகள் அறுபத்து நான்கனுள் இசைக்கலையை உயர்ந்ததாகக் கொண்டனர்.

## வட இலங்கைச் சங்கீதசபை

வட - இலங்கைச் சங்கீத சபை திருமுறைப் பண்ணிசைப் பாடவிதானமும் சாதனைக் குறிப்பேடும் தயாரித்து 1981-ஆம் ஆண்டு முதல் பொது விதிகள் அமைத்துத் திருமுறைப் பண்ணிசைத் தேர்வு நடத்திவருதல் பாராட்டவேண்டிய சேவையாகும்.

இத்துறையில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு சிவநாதன் அவர்கள் முன்னின்று பணிசெய்யும்போது சங்கீத சபையினருக்கு முடியாத காரியம் எதுவுமில்லை எனலாம்.

திருச்சிற்றம்பலம் சொல்லிச் சுற்றுடலைத் தூய்மை செய்து பன்னிரு திருமுறைகளைப் பாடசாலை மாணாக்கர் மாணாக்கியர் பண்ணிசை தவறாமல் தாளம் பிசகாமல் பாடும் பாணி கேட்டுப் பரவசப்பட்டுப் பரிசுகொடுப்பதற்குப் பாண்டியர் சோழர் இல்லாவிட்டாலும், தொழிலதிபர்கள் இருக்கிறார்கள் என்று பெருமைப்படுகிறோம்.

"சைவத்தின் மேற்சமயம் வேறில்லை, உய்வைத்தரவல்ல நால்வர் பொற்பாதங்கள் எம்முயிர்த்துணையே" என்று மழலைமொழி கேட்டுருகும் காலம் வந்ததே, இனி வருங்காலச் சமுதாயத்தைப்பற்றி நாம் இறுமாந்திருக்கலாமன்றோ.

## பண்முறையின் பழமை

இக்காலத்தில் இசையுலகில் வழங்கிவருகின்ற இராகங்கள் யாவும் பழைய பண்முறைகளே என்றும், அவற்றின் பெயர்கள் மாறிவழங்குகின்றன என்றும் பண்ணாராய்ச்சியாளர் பகர்கின்றனர்.

ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை தேவார காலத்தில் பண்முறைகள் மறுமலர்ச்சி பெற்றன என்றும், அதற்கு முந்திய காலத்திலேயே தமிழ் நாட்டில் பண்முறைகள் சிறந்து வழங்கின என்பர்.

சங்க காலத்து நூல்களான பரிபாடல், புறநானூறு பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை முதலிய நூல்களில் பண்களைப் பற்றிய குறிப்புக்கள் மிகுதியாயுள்ளன.

இன்ன பண் இன்ன காலத்தில் பாடவேண்டும் என்னும் இறுக்கமான நியதியும் அக்காலத்தில் நிலவியது. மிகப் பழைய தமிழிலக்கிய நூலாய தொல்காப்பியத்தில் இன்ன பண் இன்ன நிலத்துக்குரியது எனவும் வழக்காறு நிலவியது என்பது கூறப்பெற்றுள்ளது.

சிகண்டியார் இயற்றிய இசைநுணுக்கம், அறிவனார் இயற்றிய பஞ்சமரபு, அடியார்க்கு நல்லார் எழுதிய சிலப்பதிகார உரை பழைய பண்களைப்பற்றிய விபரங்களைக் கூறுகின்றன.

இசைத்தமிழும் நாடகத்தமிழும் காமம் பயப்பன எனக்கருதிய சமணரும் பௌத்தரும் அவற்றைத் தவிர்த்து

★ இசைக் கலை காந்தர்வம் என்னும் உபவேதமாகும் ★

இயற்றமிழ் நூல்களே செய்தார்கள். அன்றி இசை நாட கங்களுக்கு இருட்டடிப்புஞ் செய்தார்கள்.

தமிழ்நாட்டில் இசை மரபு வழக்கொழிந்த காலத்தின் பின்வந்த பல்லவராதிக்கத்தின்போது, திருஞானசம்பந்த மூர்த்திநாயனுர் பண்ணில் தோயப் பக்திப் பாடல்கள் பாடியருளினுர்.

திருஞானசம்பந்தமூர்த்திகளைக் கானத்தின் எழு பிறப்பு என்றே சேக்கிழார் சுவாமிகள் போற்றுகிறுர். தேவாரமுதலிகள் மூவராலும் இசைமரபு தழைத்தது. மறுமலர்ச்சி பெற்றது.

தேவாரத் திருப்பதிகங்களைப் பண்ணேடு பாடியவர் கள் பக்கவாத்தியங்களாகக் கொடுகொட்டி, தாளம், யாழ், தக்கை, கொக்கரை, மொந்தை, கின்னரம், குடமுழவு, வீணை, குழல், தண்ணுமை முதலிய கருவி களைக் கூட்டாகவும் தனித்தும் கொண்டனர்.

பக்திநெறியால் பலகலைகளும் புத்துணர்ச்சிபெற்ற பான்மையில் பண்ணும் பரதமும் பாங்கொத்து வளர்ந்தன. சீசகப் பேரியாழ் கிளையுடன் முரல என்று கல்லாடம் போற்றியுள்ளது.

## முத்தமிழ் மாண்பு

தமிழின் தொன்மையும் மாண்பும் பெருமையும் ஆழ அகலமும் அருமையும் அளவிட முடியாதவை. அதைச் செந்தமிழ் என்றும் பைந்தமிழ் என்றும் முத்தமிழ் என் றும் பலவாருகப் புகழ்ந்து வழங்குவர். முத்தமிழ் என் பதால் தமிழில் இயல், இசை, நாடகம் என்னும் முத் துறைகள் ஒருங்கமையப் பெற்றுள்ளன என்பது பெற்றும்.

இயற்றமிழ் என்னும்போது, அதில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களும் அவை அமைந்த இலக்கியங்களும் உள்ளமை குறிப்பாகும்.

இசைத்தமிழ் என்னும் போது, அதில் சுரம், சுருதி, இராகம் என்னும் மூன்றின் இலக்கணங்களும், பன்னீ ராயிரம் எண்ணிக்கையுள்ள பழைய பண்களமைந்த இசைமரபும் அமைந்துள்ளமை குறிப்பாகும்.

நாடகத்தமிழ் என்னும் போது தாளம், பாவனை, அலங்காரம், இரசம் என்னும் அம்சங்கள் அமைந் துள்ளமை குறிப்பாகும்.

## ஓதுவார் இராசசேகரம் அவர்கள் உபகரிப்பு

இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டுப் பிரபல ஓதுவார் இராசசேகரம் அவர்கள் இங்கே வந்து தங்கி வாழ்ந்து எம்மவருள் பலர் பண்ணிசை பயிலப் பயிற்சியளித்து மீண்டுள்ளார். வீடு நடத்தும் இல்லத்தர சிகள் பலர் இப்பயிற்சியில் பங்குபற்றி முதற்பிரிவில் திறமைச் சித்திபெற்றமை எங்கள் பாரம்பரியத்தை விளக்கியுள்ளது.

## சேர். இராமநாதன் வகுத்த நிலம்

தேசபிதாவாய சேர். இராமநாதன் அவர்கள் 1913-ம் ஆண்டிலே அமைதியான சுற்ருடலிலே சைவப் பெண்கள் கல்லூரிப் படிப்போடு கலைத்துறைப் பாடங்க ளும் பயிலவேண்டும் என்று வாய்ப்பளித்திருந்தமை பாடல் வல்லாருக்கும் வீணை வல்லாருக்கும் வாழ்வளிக்கும் நிலைய மாகியுள்ளது. இராமநாதன் அவர்கள் இருபதாம் நூற் ருண்டின் ஆரம்ப ஆண்டுகளிலேயே இந்தியாவில் புகழ் பெற்ற சங்கங்கள் சபைகளின் ஆண்டு நிறைவு விழாக் களின் அவைத் தலைவராய்க் கொலுவிருந்து புகழ்பெற்ற வர்.

## கலாநிதி நடேசன் வகுத்தவழி

இராமநாதன் அவர்களின் மருகன் கலாநிதி சு. நடேச பிள்ளை அவர்கள் 1924-ஆம் ஆண்டு முதல் 1964-ஆம் ஆண்டுவரை தமிழுக்கும் சைவத்துக்கும் இசைக்கலைக்கும் செய்த சேவை, தனித்தனி நூல்களில் எழுதவேண்டிய பெருமைக்குரியதாகும்.

சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் இசை விழாவுக்கு இங்கிருந்து அங்கு சென்று சபையை அலங் கரித்து இசைத்துறையில் மூழ்கி அத்தகைய சூழல், வாய்ப்பு இங்கேயும் உண்டாதல், நிலவுதல் வேண்டும் என்று அயராதுழைத்தவர்.

## புத்துவாட்டி சோமு

வண்ணர்பண்ணையில் புத்துவாட்டி சோமு என்னும் சோமசுந்தரம் அவர்கள், யாழ்ப்பாணத்தில் வயலின் இசை பரவப் பணிபுரிந்தவர். இவர் முதலில் தமது தந்தையார் நாகலிங்கம் என்பாரிடம் பயின்றபின், ஆர்வ மிகுதியால் தஞ்சை பிடில் வித்துவான் இராதாகிருஷ்ணன், புதுக்கோட்டை பலுக்கு பக்கிரியாபிள்ளை ஆகியோரிடம் மிகுதியாகக் கற்றுத்தேறியவர்.



## வயலின் வரலாறு

இன்று சங்கீத மேடைகளில் பிரபலிக்கமுற்று ஒலிக் கும் வயலின், மேற்கு நாட்டிலிருந்து வந்தது என்பர். இதைக் கர்நாடக இசையில் கலந்து ஒலிக்கப் புகுத்தி வாசித்தவர் முன்னுள் தஞ்சை ஆஸ்தான வித்துவான் வடிவேல் நட்டுவனுர் என்பவராவர்.

தஞ்சை ஆஸ்தான வித்துவான்களான சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகியோர் திரு வனந்தபுரத்து அரண்மனையையும் அலங்கரித்தவர்கள். திருவனந்தபுரத்தில் வடிவேல் நட்டுவனுர் பிடில் என்னும் வயலினை வாசிக்கக் கேட்டுமகிழ்ந்த மகாராசா அவர்கள் யானைத்தந்தத்தால் செய்த பிடில் ஒன்றைப் பரிசாக அளித்துக் கௌரவித்தார்.

பிடில் வாசித்துப் புகழ்பெற்றவர்களுள் திருக் கோடைக் காவல் கிருஷ்ண ஐயர், மலைக்கோட்டை கோவிந்தசாமிப்பிள்ளை, சபேஸ்ஐயர் முக்கிய இடம் பெற்றிருந்தனர்.

★ கர்நாடக சங்கீதம் தமிழ்நாட்டிற் பரவியிருப்பது ★

அண்மைக்காலத்தில் எங்கள் சுற்றுடலிலிருந்து பிடில் வாசிப்பதில் அதிக நாட்டங்கொண்டவர், இன்று மீசாலையில் வாழும் கு. வேலாயுதபிள்ளை அவர்களாவர்.

திரு. வேலாயுதபிள்ளை புத்துவாட்டி சோமசுந்தரம் அவர்களிடம் பழகிய பின், ஆர்வமிகுதியால் அண்ணாமலைப் பல்கலைக்கழகஞ் சென்று, சபேஸ்ஐயர், தஞ்சை பொன்னையாபிள்ளை, ரைகர் வரதாச்சாரியர், சாத்தூர் கிருஷ்ணையங்கார், மதுரை சுப்பிரமணியஐயர் முதலாய வித்துவான்களிடம் முறைமுறையாகப் பயின்றுவந்தவர்.

## தமிழர் வகுத்த ஐவகை நிலனும் பண்ணும், இசையும், பறையும்

- ★ தமிழர் கண்ட குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்பன நிலங்கள்.
- ★ குறிஞ்சிப்பண், முல்லைப்பண், பாலைப்பண், மருதப்பண், நெய்தற்பண் என்பன பண்கள்.
- ★ யாமயாழ், முல்லையாழ், பாலையாழ், மருதயாழ், விளரியாழ் என்பன இசைகள்.
- ★ தொண்டகப்பறை, ஏறுகோட்பறை, நிரைகோட்பறை, மணமுழவு, மீன்கோட்பறை என்பன பறைகள்.

## பண்ணும் பொழுதும்

பண் பொழுதறிந்து பாடப்பெற வேண்டியது என்பர். பண்ணும் பொழுதும் பொருத்தமுள்ள வகை:

| | | |
|---|---|---|
| குறிஞ்சி | — | யாமம் |
| மருதம் | — | விடியல் |
| பாலை | — | நண்பகல் |
| முல்லை | — | மாலை |
| நெய்தல் | — | எற்பாடு |

## தமிழிசைப் பாக்கள்

தமிழைவிட்டு இசையைப் பிரிக்கமுடியாதவாறு போல, இசையைவிட்டும் தமிழைப் பிரிக்கமுடியாது. சங்க காலத்துக்கு முன்தொடக்கம் இன்றுவரை நிலவும் எந்தப்பாவுக்கும் ஏதாவதொரு பண்ணிலோ இராகத்திலோ பாடும் அமைப்பு இருக்கிறது.

வெண்பா, கலிப்பா, அகவற்பா முதலாகவருகின்ற பாவினங்களை இன்ன இன்னவகையிற் பாடலாம் என்று அரபத்தநாவலர் பரதசாத்திரம் செய்துள்ளார்.

''சங்கராபரணம் வெண்கவிக்காகும்
அகவல் தாழிசைக் காகும் தோடி
கலிக்குப் பந்துவராளியைக் கழறுவர்
கலித்துறைக் காகும் பைரவி என்ப''

### பரிபாடல்

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை என்றும் பழைய பாடல்களுள் ஒங்கு பரிபாடல் எனப் புகழ்பெற்ற தொகுதி முருகன், திருமால், வையைநதி புகழ்பாடுகிறது. பரிபாடல் இசையோடு பாடவேண்டிய இலக்கியம் எனக்கண்ட புலவர்கள் அதற்குப் பண் அமைத்துள்ளார். பண்களின் பெயர்களும் அவற்றை அமைத்த இசைப்புலவர் தம் பெயர்களும் நமக்குக்கிடைத்துள்ளன.

### சிலப்பதிகாரம்

சங்க காலத்தையடுத்து வந்த சமணகாப்பியமாய சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்து, கானல்வரி, வேட்டுவவரி, ஆச்சியர் குரவை, கந்துகவரி, ஊசல்வரி, அம்மானைவரி, வள்ளைப்பாட்டு முதலிய இசைப்பாடல்கள் வரிசையாக வருகின்றன. வரிப்பாட்டு என்பதற்கு உரை எழுதிய அரும்பதவுரையாசிரியர், ''இஃது இசைப்பாவால் பெற்ற பெயர்'' என்று குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

### வரிப்பாட்டு

வரிப்பாட்டு என்பது ''பண்ணும் திறமும் செயலும் பாணியும்'' பெற்றுவரும் பாட்டாகும். அது புகழ்ச்சி, இகழ்ச்சி குறித்துவருவது.

### உரு

உருப்படி எனவும் வழங்கும் அமைவு அகநாடகங்கள் புறநாடகங்கள் ஆகியவற்றுக்குரியன என்பர். அகக்கூத்தில் கந்தம் முதல் பிரபந்தம் வரையுமாக 28 உருக்கள் உள்ளன. புறக்கூத்தில் தேவபாணி முதலாகப் பல உருக்கள் உள்ளன. கந்தம் அடிவரையறையுள்ளதாய் ஒரு தாளத்தில் அமையும், பிரபந்தம் அடிவரையின்றி பல தாளங்களில் அமையும்.

பிரபந்தத்துக்கு சுரம், பிருது, பதம், தென்னகம், பாடம், தாளம் என்னும் ஆறு உறுப்புக்கள் உண்டு.

சுரம் என்பது தாது, இசையமைப்பு, மெட்டு.
பிருது என்பது பாட்டுடைத் தலைவனின் புகழ்.
பதம் என்பது இயற்றியவர் பற்றிய குறிப்பு.
தென்னகம் என்பது மங்கலத்தைக் குறிப்பது.
பாடம் என்பது சொற்கட்டு, வாச்சியக்கூறு.

### வாரம் என்னும் பற்று

தேவாரம் என்னும் புனிதச் சொல் தே + வாரம் என்றாகி தெய்வத்தைப்பற்றி அன்போடு, பற்றுதலோடு பாடும் பா எனப் பொருள்தரும். சொல்லொழுக்கு, இசையொழுக்கு உள்ள பாடலாகும். கடு நடையும் மந்த நடையும் இன்றி நடுத்தர நடையினையுடையது. ''நடையிலும் ஒலியிலும் எழுத்திலும் நோக்கித் தொடையமைந்து ஒழுகுந்தொன்மைத்து என்ப'' எனவரும் சிலப்பதிகார உரைமேற்கோள் இதனை விளக்கும். ''தேவர் பராவுதல் முன்னிலைக் கண்ணே'' என்று எப்பவோ தொல்காப்பியர் இதனை வகுத்துள்ளார்.

தேவபாணி என்னும் பெயரில் வழங்கும் இசைப்பா சிறு தேவபாணி, பெருந் தேவபாணி என்னும் இருவகைத் தாகிப் பஞ்சமரபு என்னும் நூலில் குறிக்கப்பெற்றுள்ளது.

அறிவனர் என்பார் சிந்து, திபதை, சவலை, சமபாத விருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணம் என்னும் ஒன்பது இசைப் பாக்களைக் குறிப்பிடுவர்.

★ பல்லவி என்பது சுவையும் கருத்தும் உள்ளது ★

அண்மைக்காலப் புலவர்களுள் விபுலாநந்த அடிகளார் தேவபாணியின் சிறப்புநோக்கி இசைமரபு தவருமல் தாமே சில பாடல்கள் பாடியிருக்கிருர்கள்.

## யாழ்முரி: வீணைக்கோடரி

திருஞானசம்பந்தமூர்த்திநாயஞரின் ''மாதர் மடப் பிடியும்'' எனத்தொடங்கும் தேவாரம் யாழிலடங்காமல் யாழ்முரி எனப் பெயர்பெற்றது. இது மேகராகக் குறிஞ் சிப் பண்ணில் தோய்ந்த பதிகமாகும்.

''விரியோணி'' என்னும் தொடக்கத்தையுடைய பைரவி வர்ணப்பாடல் ஒன்று கமகங்கள் நிறைந்து அமைந்ததால் வீணையில் அடங்காமல் வீணைக்கோடரி எனப்பெற்றுள்ளது.

## திருச்சிற்றம்பலம்

தேவாரம் முதலாகத் திருவிருத்தம் ஈருகத்திருமுறைகள் பாடும்போது முதலிலும் ஈற்றிலும் திருச்சிற்றம்பலம் எனச் சொல்லுதல் வழக்கம். நமது நன்றிக்கடனை நாவாரச் சொல்லுவதற்கு வாய்த்த ஒரு சொல் அது.

பல்லாண்டுக் காலமாக மறைக்கப்பட்டும் மறக்கப் பட்டும்போன திருமுறைகளில் ஒரு பகுதியையாவது கறையானினின்றும் மீட்டுத்தந்த பெருமை சிற்றம்பலம் என்னும் சிதம்பரத்து மண்டபத்துக்கே உரியதாகும். தெய்வத்தன்மை வாய்ந்த அந்தச் சிற்றம்பலத்தையே திருச்சிற்றம்பலம் எனக்கூறித் துணையாகவும் பாவனை பண்ணிக் கொள்ளுகிறோம். வாழ்க திருச்சிற்றம்பலம்.

## 1. திருப்புகழ்: இறைவன் புகழ்

இவை சந்தத்தை அடிப்படையாகக் கொண்ட இசைப் பாடல்கள். ''தனதன தத்த தனதன தத்த'' என்றும், ''தானதன தானத் தனதான'' என்றும், ''தனதன தனதன தனதன தனதன'' என்றும் பலவிதமான சந்தக் குறிப்புகள் திருப்புகழில் ததும்பி வருகின்றன.

## கீர்த்தனை இறைவன் கீர்த்தி

இவை பல்லவி அனுபல்லவி, சரணம் என்னும் உறுப் புக்கள் பொலியவரும் இசைப்பாடல்களாகும். அருணா சலக் கவிராயர் முதலானோர் அருமையான கீர்த்தனைகள் பாடியுள்ளார்கள். யாழ்ப்பாணத்து நல்லூர் கந்தப்பிள்ளை யும், அவர் மகன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும் பல கீர்த்தனைகள் பாடியுள்ளார்கள்.

## 3. சிந்து

நாட்டுப் பாடல்வகைகளில் ஒன்ருன இசைப்பாடல் வகையில், நொண்டிச் சிந்து, வழிநடைச் சிந்து, காவடிச் சிந்து முதலியன பிரதானமானவை.

## 4. கும்மி

திருவிளக்கேற்றி வழிபட்ட பெண்கள், வட்டமிட்டு நின்று கைகளால் ஒலித்துப் பாடுதல். ''வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக் கொட்டி இசைத் திடுமோர் கூட்டமுதப் பாட்டு'' என்று சுப்பிரமணிய பாரதியார் பாடுவர். ஆண்கள் கூடிக் கும்மியடித்தல் ஒயிற் கும்மி என வழங்கும்.






## 5. தெம்மாங்கு: வண்டிக்காரர் பாட்டு

வண்டிக் காரருக்கும் வண்டியிழுக்கும் மாடுகளுக்கும் களைப்புத்தோன்ருமல், இரவு நேரத்தில் நெடுஞ்சாலை ஓரத்தில் நீண்ட வழி போகும்போது பாடப்பெறும் இசைப்பாட்டு.

## 5. வள்ளைப் பாட்டு: நெற்குத்தும் பாட்டு

அக்காலத்தில் பெண்கள் நெற்குத்தும்போது, களைப் புத்தோன்ருமல் பாடும் இசைப்பாட்டு. ஊழ்முறை உலக்கை ஓச்சிவாழிய தகுமனைக் கிழவர் தம்வளம்கூறி மகளிர் பாடுவது வள்ளைப்பாட்டே'' என்று திவாகரம் கூறுகிறது.

இன்னும் ஏற்றப்பாட்டு கப்பற்பாட்டு, தாலாட்டுப் பாட்டு முதலிய இசைப்பாடல்கள் பல தமிழோடு தமிழாய் நிலவுகின்றன. அவற்றையெல்லாம் சிதையவிடாமல் தேடித் தொகுத்துத் தமிழ்த்தொண்டும் இசைத் தொண்டும் செய்வோமாக.

## ஏழிசை, பிறக்கும் இடங்கள், இசையுவமைகள், அதிதெய்வங்கள்

1. ஏழிசை: குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்.
2. பிறக்கும் இடங்கள்: கண்டம், நா, அண்ணம், தலை, நெற்றி, மார்பு, மூக்கு.
3. இசையுவமைகள்: மயில், இடபம், ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை.
4. அதிதெய்வங்கள்: விசுவாமித்திரன், சமதக்கினி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன், ஈசன்.

## தலைமைபற்றிய இராகங்கள்

பைரவி, தேவக்கிரியை, மேகரஞ்சி குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, ஸ்ரீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, தேசி, இலலிதை, தோடி, வசந்தம், இராமக்கிரியை, வராளி, கௌசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தந்நியாசி, காம்போதி, கௌளி, நாட்டை, தேசாக்ஷரி, காந்தாரி, சாரங்கம்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்,
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-7-82.